**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்தி மொழி ஆசிரியர்களுக்கு, அவர்களுக்கு உரிய ஊதியம் வழங்கப்படுகிறதே தவிர, அதிக ஊதியம் வழங்கப்பட்டதாக தகவல் இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 643 பேர் அப்போது 'அண்டர் எக்விப்டு' ஆக இருந்தார்கள் என்று கூறினார்கள். அவர்கள் இப்போது—'எக்விப்டு'ஆக—தகுதிக்குரியவர்களாக ஆகி வந்திருந்தால் அவர்களுக்கு இலாகா மூலமாக வேலை கொடுக்க தக்க ஆணை பிறப்பிக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இப்போது 643 பேர் இந்தி ஆசிரியர்களுக்கு வேலை இல்லை. அவர்கள் இப்போது தகுதி யுடையவர்களாக ஆகியிருந்தால், அந்தப் பதவிக்கு வேலை இல்லை. ஏற்கெனவே இந்தமொழி ஆசிரியர்களுக்கு அவரவர்களுடைய தகுதிக்கு ஏற்ப வேலை தரலாம் என்று கருதப்பட்டது. அப்போது தகுதிபெருத இந்தி ஆசிரியர்கள் இப்பொழுது தகுதியுடையவர்களாக தங்களை ஆக்கிக் கொண்டிருந்தாலும் இப்போது அவர்களை வைத்துக்கொள்ள முடியாது. வேறு வகையில் அவர்களுக்கு வேலைவாய்ப்புத் தரலாம்.

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் அவர்கள் பதிவு செய்துகொள்வதன்மூலம், அவர்களுக்கு முதல் சலுகை அளிக்கலாம் என்று பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் ஒரு பரிந்துரையை அரசுக்கு அனுப்பியிருக்கிருர்கள். அதன்பேரில் தக்க முயற்சி எடுத்துக்கொள்ளலாம் என்பதுபற்றி அரசு முடிவு செய்ய வேண்டியிருக்கிறது.

### கோவை தலைமையிட மருத்துவ மனை

* 505 வினு.—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கோவை தலைமை மருத்துவ மனையில் குழந்தைகளுக்கு என ஒதுக்கப் பட்டுள்ள படுக்கைகளை அதிகமாக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இல்லை.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, கோவையிலே மருத்துவமனை யும் இருக்கிறது. அங்கே இருக்கிற மருத்துவமனையில் நிறைய குழந்தைகள் படுக்கைகள் தேவைப்படுகின்றன. அதை முன்னிட்டு ஒரு புதிய குழந்தை மருத்துவமனையை ஏற்படுத்தித்தர இனியாவது அரசு முயற்சி செய்யுமா ?

1972 மார்ச் 15]

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** கோவை மருத்துவமனையில் இப்பொழுதே 90 குழந்தைகளுக்கான படுக்கைகள் இருக்கின்றன. ஒரு புதிய பெரிய மருத்துவமனையைக் கட்ட வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் கூறுகிறார்கள். கோவை மாவட்டத்திலுள்ள சட்டமன்ற அங்கத்தினர்கள் 10 லட்சம் ரூபாய் நிதி திரட்டித் தந்தால் விரைவில் மருத்துவ மனை கட்டிக் கொடுக்கமுடியும்.

**திரு. ச. மு. பழனியப்பன்:** தலைவர் அவர்களே, கோவை மருத்துவ மனையில் வியாதிகளைக் கண்டுபிடிப்பதற்கான நவீன கருவிகள் இல்லை என்கிற நிலைமை இருக்கிறது. மாவட்ட தலைமையிட மருத்துவ மனைக்குக் கிடைக்க வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் அரசு உடனடியாகச் செய்து கொடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** கோவையிலே இருக்கின்ற மருத்துவ மனைக்கு, பிற இடங்களில் உள்ள மருத்துவக்கல்வித்துறை மருத்துவ மனைகளுக்கு அளிக்கப்படுவதைப்போன்ற அளவில் சிறப்புப் பகுதிகளை அமைத்துதர ஆண்டுதோறும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஈரோட்டிலும் மாவட்ட மருத்துவ மனைக்குரிய சிறப்புடையதாக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. கோவையிலும் ஈரோட்டிலும் இத்தகைய வளர்ச்சித் திட்டங்கள் படிப்படியாக நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். நல்லசாமி:** தலைவர் அவர்களே, மருத்துவமனையை விஸ்தரிப்பது சம்பந்தமாக ஒவ்வொரு இடத்திலும் செல்வாக்குள்ளவர்கள் அமைச்சரை நேரடியாகச் சந்தித்து, விஸ்தரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறார்கள். அதைத் தவிர்த்து, தமிழ்நாடு பூராவும் ஜனத்தொகையின் அடிப்படையில், ஆங்காங்குள்ள மருத்துவமனைகளில் படுக்கைகளையும், மற்ற வசதிகளையும் விரிவுபடுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் பல்வேறு பகுதிகளுக்குத் தேவையான வசதிகளை இருக்கக்கூடிய நிதிவசதிகளைக் கொண்டு ஏற்படுத்தித் தருகிறது அரசு. எந்தெந்த பகுதிகளில்—ஸ்பெஷாலிட்டிஸ்—சிறப்பு பிரிவு அமைய வேண்டுமோ அவற்றைச் செய்துதரவும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. தனியார் கட்டித் தருகிற மருத்துவ மனைகளை ஏற்கவும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.